**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar Case No: | | CC. 233/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | | அ.சா. 2 |
| Name | : | திருமதி. வாலாம்பாள் |
| Husband Name: | | திரு. மணிமொழி |
| Village | : | ஒலைப்பாடி |
| Taluk | : | குன்னம் |
| Age | : | 59 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.08.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரிகள் 1, 2 ஆஜர் இல்லை அவருக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். அ.சா.1 சுமதி எனது மகள். எதிரிகள் இளையராஜா, ராமசாமி, தங்கதுரை ஆகியோரை தெரியும். எதிரி இளையராஜாவுக்கு எனது மருமகனின் தங்கச்சி சித்ராவை திருமணம் செய்து கொடுத்தனர். சித்ரா தற்போது உயிருடன் இல்லை. அதன்பிறகு அ.சா.1க்கும் எதிரி இளையராஜாவுக்கும் இடையே சொத்து சம்பந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. எதிரிகள் ராமசாமியும், தங்கதுரையும் வந்தார்கள் எதிரி இளையராஜா போன் செய்து சங்கு அறுத்துறுவேன்டி உன்ன என்று என் மகளை மிரட்டினார். சுமார் 7 வருடத்திற்கு முன்பு இரவு 7 மணி 7 நிமிசத்தில் எங்கள் வீட்டு வாசலுக்கு எதிரிகள் ராமசாமி, தங்கதுரையும் வந்தார்கள். எதிரிகள் தங்கதுரையும், ராமசாமியை எனது மகளை தலைமுடியை இழுத்து போட்டு அடித்தனர். என்றைக்கு இருந்தாலும் என் கையால் தான் உனக்கு சாவு என்று எதிரி தங்கதுரை எனது மகளை பார்த்து சொன்னார். இப்படி சொல்லுறீங்களே என்று நான் கேட்டதற்கு எனது முடியையும் தங்கதுரை பிடித்து

இழுத்து என்னை தேவிடியா என்னைக்கு இருந்தாலும் என் கையால தான் உன் மகளுக்கு சாவு என்று சொல்லி என்னை அசிங்கமாக திட்டினார். அதன்பிறகு எனது மகளை 108 ஆம்புலன்ஸ் மூலமாக பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்து ஒரு வாரமாக என் மகள் உள் நோயாளியாக இருந்தார். வழக்கு சம்பவம் சம்பந்தமாக மருத்துவமனைக்கு வந்த போலிசாரிடம் எனது மகள் புகார் கொடுத்தார். எனது மருமகன் ஏற்கனவே இறந்துவிட்டார். எனது மகள் அவளது ஒரு கிட்னியை ஏற்கனவே எனது மருமகனுக்கு கொடுத்துவிட்டார். எனது மகள் கொடுத்த புகார் சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரியின் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போதிய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.